**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>வேலுநாச்சியார்</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**20.8.2024 OS.No. 34 /2020 வா.சா.1 வேலுநாச்சியார் ஆஜர்**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1-ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கடந்த 21.07.1963-ம் தேதியிட்டு தாவா சொத்து மற்றும் வேறு சொத்துக்களை துரைச்சாமி தேவர்,சுப்பிரமணியத்தேவர் ஆகியோர்கள் 1-வது பார்ட்டியாகவும் மைனராக இருந்த இந்த வழக்கு 1-ம் வாதி குருசாமிக்கு கார்டியன் ஸ்தானத்தில் தகப்பனாரான பொன்னுச்சாமி 2-வது பார்ட்டியாகவும் இருந்து எழுதி கொண்ட ஒரு பதிவு செய்யப்பட்ட பாகபத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **( 21.07.1963-ம் தேதியிட்ட பாகபத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**2.** கடந்த 22.10.1974-ம் தேதியிட்ட வாதி குருசாமி, அவரது தகப்பனார் பொன்னுச்சாமி தேவர், தாயார் வேலு நாச்சியார் ஆகிய மூவரும் சேர்ந்து வாதியின் மக்களான இந்த வழக்க 2,3 வாதிகள் மைனராக இருந்ததால் அவர்களது தாயாரும் 1-ம் வாதியின் மனைவியுமான பொன்னு முத்து நாச்சியார் என்பவரை மைனர்களுக்கு கார்டியனாக காண்பித்து தாவா சொத்தையும் வேறு சில சொத்துக்களையும் பொறுத்து பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(22.10.1974-ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**3.** கடந்த 12.02.1981-ம் தேதியிட்டு 22.10.1974செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யப்பட்ட பதிவு ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(22.10.1974செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யப்பட்ட பதிவு ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 26.02.1943-ம் தேதியிட்டு தாவா சொத்திற்கும் கிழக்கேயுள்ள தற்போதைய புல எண்: 276/21-ஐ முத்துராஜா என்பவர்

உடையனசாமி தேவரிடம் கிரயம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(26.02.1943–ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.